இலங்கை

கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2025

# முன்னோடி வினாத்தாள்

# மட்டம் 01

# 1603 – பொருளியல் (ECN)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

# இலங்கை

# கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

# 1603 – பொருளியல் [FAC]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

விடையெழுத : 03 மணித்தியாலம்

**வினாத்தாள் கட்டமைப்பு:**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது: பகுதி **A**, பகுதி **B** மற்றும் பகுதி **C**.
- பகுதி **A**, பகுதி **B** மற்றும் பகுதி **C** ஆகியவற்றிலுள்ள அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

| **பகுதி** | **புள்ளிகள்** |
|---|---|
| பகுதி **A** | 40 |
| பகுதி **B** | 40 |
| பகுதி **C** | 20 |
| **மொத்தம்** | **100** |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளுக்கான சித்திப் புள்ளி 50 ஆகும்.

**விடைகள்:**

- அனைத்து விடைகளும் உங்களுக்குத் தரப்படுகின்ற விடைத்தாள் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். வினாத்தாளிலேயே எழுதப்படும் விடைகள் புள்ளியிடுவதற்காகக் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான உங்கள் விடையை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- அனைத்துச் செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களில் எழுத வேண்டாம்.

**விடைத்தாள் புத்தகம்:**

- ஒவ்வொரு விடைத்தாள் புத்தகத்தினதும் முகப்பு அட்டையில் அறிவுறுத்தல்கள் காட்டப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- பரீட்சார்த்திகள் குறியீட்டு அட்சரகணிதம் மற்றும் வகையீடுகளுக்கான வசதிகளற்ற எந்தவொரு கணிப்பானையும் பயன்படுத்தலாம். நிரற்படுத்தத்தக்க கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**இணைப்பு:**

- செயல் வினைச்சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் (OTQ's தவிர) கொண்டிருக்கும். மாணவர்கள் சரிபார்ப்புப் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

**இருபது (20) கட்டாய வினாக்கள்**

(மொத்தம் 40 புள்ளிகள்)

**பகுதி A**

## *வினா 01*

இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை வினாவின் இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.

1.1 மனிதத் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கான வளங்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) சந்தர்ப்பச் செலவு. (2) அரிதானதன்மை.

(3) பொருளாதாரக் கிரயம். (4) விருப்பத்தெரிவு.

1.2 பின்வருவனவற்றில் பொருளாதாரம் ஒன்றின் உற்பத்திச் சாத்திய வளையி வலப்பக்கமாக நகர்வதற்கான ஒரு காரணமாக அமைவது எது?

(1) வளங்களின் அளவில் ஏற்படும் குறைவு.

(2) திறன்மிக்க பணியாளர்களின் இடம்பெயர்வு.

(3) தொழினுட்ப மேம்பாடு.

(4) தொற்று நோய் காரணமாக வேலை நேரம் குறைவடைதல்.

1.3 பின்வருவனவற்றில் நிலைபேறான அபிவிருத்திச் சுயவிபரத்தில் **உள்ளடக்கப்படாதது** எது?

(1) சமூக இயக்கம் (2) நீதி

(3) சுகாதார நிலைமைகள் (4) நிறுவனம்.

1.4 பண்டம் ஒன்றின் கேள்வி ($Q_d$) மற்றும் நிரம்பல் ($Q_s$) சமன்பாடுகள் கீழே உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

$$Q_d = 2,800 - 25p$$

$$Q_s = -200 + 100p$$

பண்டத்தின் சமநிலை விலையானது :

(1) ரூ. 24/-. (2) ரூ. 30/-. (3) ரூ. 25/-. (4) ரூ. 50/-.

1.5 கீழ்வரும் கூற்றுக்களிலிருந்து ‘‘நுகர்வோர் மிகை’’யை விளக்கும் சுற்றைத் தெரிவுசெய்க :

(1) உற்பத்தியாளர்கள் வசூலிக்கத் தயாராக இருக்கின்ற விலைக்கும் அவர்கள் உண்மையில் விற்கின்ற விலைக்கும் இடையேயான வேறுபாடு.

(2) பண்டங்களுக்கு நுகர்வோர் செலுத்தத் தயாராக உள்ள மொத்தத் தொகைக்கும் அவர்கள் உண்மையில் செலுத்திய மொத்தத் தொகைக்கும் இடையேயான வேறுபாடு.

(3) தேவைப்படும் அளவானது வழங்கப்பட்ட அளவை விட அதிகமாக இருக்கும்போது இது நிகழ்கிறது.

(4) வழங்கப்பட்ட அளவானது தேவைப்பட்ட அளவை விட அதிகமாக இருக்கும்போது இது நிகழ்கிறது.

1.6 ஒரு பொருளை நுகர்வதால் நபர் அடைகின்ற திருப்தியானது எவ்வாறு அழைக்கப்படுகிறது :

(1) எல்லைப் பயன் (2) சந்தர்ப்பச் செலவு.

(3) பயன். (4) மொத்தப் பயன்.

1.7 2024 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்தப் பொருளாதார மீளாய்வுக்கு இணங்க, 2024 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் தலா வருமானம் (Per Capita Income) :

(1) US $ 4,000. (2) US $ 4,516. (3) US $ 3,685. (4) US $ 3,379.

1.8 பின்வருவனவற்றில் இலங்கையிலுள்ள நிறைபோட்டிச் சந்தை ஒன்றிற்கு மிக நெருக்கமான எடுத்துக்காட்டாக அமைவது எது?

(1) நெல் சந்தை. (2) அரிசிச் சந்தை

(3) மின்சாரச் சந்தை (4) மருந்தகச் சந்தை.

1.9 பின்வருவனவற்றில் ஒரு நிறைபோட்டிச் சந்தையின் ஒரு பண்பாக (characteristic) **அமையாதது** எது?

(1) நிறுவனங்கள் விலை மீது கட்டுப்பாடுகளைக் கொண்டிருப்பதில்லை.

(2) சந்தைக்கு வழங்கல் செய்வதற்கான தனிச் சட்டபூர்வ உரிமையை (sole legal right) நிறுவனம் வைத்திருக்கிறது.

(3) நிறுவனங்கள் விற்கும் பொருள்கள் ஒரே மாதிரியானவை.

(4) சந்தைக்கான கட்டற்ற நுழைவைக் கொண்டுள்ளது.

1.10 இரண்டு பொருள்களுக்கு இடையேயான குறுக்கு விலை நெகிழ்ச்சியின் குணகம் நேர்மறையானதாக இருப்பின் அவ்விரு பொருள்களும் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) தரம் தாழ்ந்த (Inferior) பொருள்கள்    (2) நிரப்புப் பொருள்கள்

(3) பிரதியீட்டுப் பொருள்கள்    (4) சாதாரண பொருள்கள்.

இல. **1.11** தொடக்கம் **1.12** வரையான வினாக்களில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ள சரியான சொல் / சொற்களைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட சொல் / சொற்களை வினா இலக்கத்துடன் உமது விடைத்தாள் புத்தகத்தில் எழுதுக :

1.11 ஒரு வெளியீட்டின் ஒரு மேலதிக அலகை உற்பத்தி செய்வதற்கான மேலதிக கிரயம் …………………….. *(சராசரி / எல்லை)*க் கிரயம் என அழைக்கப்படுகிறது.

1.12 இலாபம் என்பது …………………….. *(மூலதனம் / தொழில்முனைவு)* இற்கான வெகுமதி ஆகும்.

இல. **1.13** தொடக்கம் **1.14** வரை தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியானதா அல்லது தவறானதா எனக் குறிப்பிடுக. உங்களுடைய விடைகளை ***(சரியானது / தவறானது)*** வினா இலக்கத்துடன் உமது விடைத்தாள் புத்தகத்தில் எழுதுக :

1.13 பிலிப்ஸ் வளையியானது பணவீக்கம் மற்றும் வேலையின்மை ஆகியவற்றுக்கிடையேயான நேர்மறைத் தொடர்பை விபரிக்கிறது.

1.14 நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கும்போது, பணத்திற்கான கேள்வியும் அதிகரிக்கிறது.

இல. **1.15** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களுடன் உமது விடைத்தாள் புத்தகத்தில் எழுதுக.

1.15 அளவுத்திட்ட விளைவின் இரண்டு (02) கட்டங்களைப் (stages) பட்டியலிடுக.

1.16 சர்வதேச வர்த்தகத்தில் உள்ள இரண்டு (02) பாதுகாப்புவாத முறைகளைக் குறிப்பிடுக.

1.17 நெகிழ்வான பரிமாற்று வீதம் என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

1.18 தேசிய வருமானக் கணக்கீட்டிற்கான இரண்டு (02) அணுகுமுறைகளைப் பட்டியலிடுக.

1.19 தனியுரிமையின் (ஏகபோக உரிமை) இரண்டு (02) பண்புகளைக் குறிப்பிடுக.

1.20 சிறந்த பணத்தின் இரண்டு (02) பண்புகளைக் (characteristics) குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 40 புள்ளிகள்)

***பகுதி A முடிவு***

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**

மொத்தம் 40 புள்ளிகள்

**பகுதி B**

**வினா 02**

(a) "பொருளாதார வளங்கள்" மற்றும் "பொருளாதாரமற்ற வளங்கள்" ஆகியவற்றுக்கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) உற்பத்திச் சாத்திய வளையியின் (PPC) மூன்று (03) எடுகோள்களைக் (assumptions) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) ஒரு சந்தைப் பொருளாதாரம் எவ்வாறு அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கிறது என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

***வினா 03***

(a) நிரம்பல் வளையியை இடப்பக்கமாக நகர்த்தும் மூன்று (03) காரணிகளை **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(b) சந்தைச் சக்திகள் பண்டம் ஒன்றின் சமநிலை விலையை எவ்வாறு தீர்மானிக்கின்றன என்பதை ஒரு வரைபின் உதவியுடன் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) நிரம்பல் விதி (Law of Supply) என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

***வினா 04***

(a) அரசாங்கம் பண்டமொன்றிற்கு குறைந்தபட்ச சட்டரீதியான விலையை விதிப்பதால் ஏற்படும் விளைவுகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) ஒரு தனியுரிமையாளர் இலாபத்தை எவ்வாறு உச்சப்படுத்துகிறார் என்பதை ஒரு வரைபின் உதவியுடன் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) "மனித அபிவிருத்திச் சுட்டெண் ஆனது அபிவிருத்தியின் மிகவும் விரிவான அளவீடாகக் கருதப்படுகிறது."

மேற்படி கூற்றை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

***வினா 05***

(a) நிதி இடையீட்டாளர்களின் (intermediaries) வகிபாகத்தை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) பணத்தின் இரண்டு (02) தொழிற்பாடுகளை (functions) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) வர்த்தக வங்கிகளில் திரவத்தன்மை (liquidity) மற்றும் இலாபத்தன்மை (profitability) ஆகியவற்றுக் கிடையேயான தொடர்பை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

***பகுதி B முடிவு***

**ஒரு கட்டாய வினா**

**(**மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி C

***வினா 06***

(A) ஒரு வருட காலப்பகுதிக்கான பொருளாதாரமொன்றின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய கீழ்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | **ரூ. மில்லியன்** |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவினம் | 4,000 |
| அரசாங்க நுகர்வுச் செலவினம் | 6,000 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 2,500 |
| இருப்பில் உள்ள மாற்றங்கள் | 400 |
| பெறுமதிகளில் உள்ள மாற்றங்கள் | 320 |
| பொருள்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிகள் | 5,200 |
| பொருள்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகள் | 14,500 |
| வெளிநாட்டு நிகர முதன்மை வருமானம் | 700 |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) மொத்த உள்நாட்டுச் செலவினம் (GDE) – சந்தை விலையில். (03 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில். (02 புள்ளிகள்)

(c) மொத்த தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில். (02 புள்ளிகள்)

(B) 2020 ஆம் ஆண்டிற்கும் 2023 ஆம் ஆண்டிற்குமிடையே இலங்கை ரூபாய் ஆனது அமெரிக்க டொலர் மற்றும் யூரோ நாணயங்களுக்கு எதிராக மதிப்புக் குறைந்திருந்தது.

மேற்படி காலப்பகுதியில் இலங்கை ரூபாயின் பரிமாற்ற வீதத்தில் ஏற்பட்ட சரிவுக்கான நான்கு (04) காரணங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(C) இலங்கையின் பொருளாதாரம், குறிப்பாக 2019 ஆம் ஆண்டின் பின்னர் மந்தநிலையை அனுபவித்தது. இந்தப் பொருளாதார சரிவின் பின்னணியில் உள்ள இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.**

(03 புள்ளிகள்)

(D) பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு ஒரு பொருளாதாரம் நிதிக் கொள்கையை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதை இரண்டு (02) வழிகளில் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(E) இரண்டாவது மிலேனியம் காலப்பகுதியில் இலங்கை அரசாங்கம் நிதிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட இரண்டு (02) குறைபாடுகளைப் **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

***பகுதி C முடிவு***

# செயல் வினைச் சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல்

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **நினைவிற் கொள்ளல்**<br><br>உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக்கருக்கள் , அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல் | அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify) | யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல் | தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல் |
| | வரையறுக்க (Define) | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல் |
| | ஏற்பிசைவு செய்க (Recognize) | முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு | முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல் |
| | குறிப்பிடுக/ கூறுக (State) | தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு | பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல் |
| | பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List) | பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர் | பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல் |
| | பதிவு செய்க (Record) | ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல). | தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல் |
| **விளங்கிக் கொள்ளல்**<br><br>தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல் | கட்டியெழுப்புக (Construct) | கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல் | வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல் |
| | வேறுபடுத்துக (Differentiate) | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல் | எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல் |
| | கலந்துரையாடுக / ஆராய்க (Discuss) | ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல் | பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல் |
| | விபரிக்க (Explain) | எதையாவது பெரியளவில் விரிவாகத் தெளிவுபடுத்தல் | தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல் |
| | எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக (Illustrate) | ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல் | பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல் |
| | உட்பொருளை விளக்குக (Interpret) | தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல் | உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல் |
| | விளக்குக (Describe) | ஏதாவதொன்றின் விரிவான விளக்கம் | கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல் |
| | பொழிப்பாக்குக (Summarise) | பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று | பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல் |
| **பிரயோகித்தல்**<br><br>கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது.. | பிரயோகிக்க (Apply) | ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல் | ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல் |
| | கணிக்குக / கணிப்பீடு செய்க (calculate) | கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல் | ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல் |
| | தீர்மானிக்க (Determine) | ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல் | கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிபு செய்தல் |
| | செயல் விளக்கமளிக்குக (Demonstrate) | ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல் | கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல் |
| | தயாரிக்க (Prepare) | பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல் |
| | பயன்படுத்துக (Use) | ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல் | தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல் |
| | முன்வைக்குக (Present) | தகவல்களை பயனுறுதிமிக்க வகையில் பகிர்தல் | பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல் |

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு**<br><br>தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல் | பகுப்பாய்வு செய்க (Analyse) | ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல் | சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல் |
| | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல் | பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல் |
| | பிரித்தறிக (Distinguish) | தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல் | பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல் |
| | பரீட்சிக்க / சோதிக்க (Examine) | ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல் | ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல் |
| | கோடிட்டுக் காட்டுக (Outline) | பிரதான விடயங்களின் பொழிப்பு | பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல் |
| | நடத்துக (Conduct) | ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல் |
| | அறிக்கையிடுக (Report) | கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு | பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல் |
| **மதிப்பீடு**<br><br>தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படையில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல் | ஆலோசனை வழங்குக (Advise) | யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல் | பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல் |
| | மதிப்பீடு செய்க (Evaluate) | பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு | தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்புடைமையை மதிப்பிடுதல் |
| | அமைக்குக (Formulate) | ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி | நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல் |
| | பரிந்துரை செய்க (Recommend) | பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல் | தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல் |
| **உருவாக்குதல்**<br><br>ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல் | உருவாக்குக (Create) | புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல் | அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல் |
| | மதிப்பிடுக (Assess) | தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல் | கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல் |
| | விருத்தி செய்க (Develop) | ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக்கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம் | காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல் |
| | முன்மொழிக (Propose) | கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல் | ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல் |
| | இணைப்பாக்கம் செய்க (Synthesis) | ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல் | பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல் |
| | வடிவமைக்குக (Design) | ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல் | ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல் |
| | தொகுக்குக (Compile) | பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல் | சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல் |

இலங்கை

கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2025

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# மட்டம் 01

## 1603 – பொருளியல் (ECN)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQS)**

**பகுதி A**

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

**வினா 1 இற்கான விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1.1 | (2) | 1.6 | (3) | 1.11 | எல்லை |
| 1.2 | (3) | 1.7 | (2) | 1.12 | தொழில்முனைவு |
| 1.3 | (2) | 1.8 | (1) | 1.13 | தவறானது |
| 1.4 | (1) | 1.9 | (2) | 1.14 | சரியானது |
| 1.5 | (2) | 1.10 | (3) | | |

**(02 புள்ளிகள் வீதம், 28 புள்ளிகள்)**

1.15
- அளவுத்திட்ட விளைவு அதிகரித்தல்
- அளவுத்திட்ட விளைவு குறைவடைதல்
- அளவுத்திட்ட விளைவு மாறாதிருத்தல். **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

1.16
- விதிப்பனவுகள்.
- ஒதுக்கீடுகள் (Quotas).
- மானியங்கள்
- ஏற்றுமதிகள் மீதான தன்னார்வ வரையறைகள்.
- அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள்.
- நிருவாகம் மற்றும் தொழினுட்பத்தில் நியமத்திற்கான வரையறைகளை அமைத்தல்.
- பொருளாதாரத் தடைகளின் அறிமுகம். **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

1.17 நெகிழ்வான பரிமாற்று வீதம் என்பது சந்தைச் சக்திகளால் அதாவது கேள்வி மற்றும் நிரம்பல் சக்திகளால் பரிமாற்று வீதத்தைத் தீர்மானிக்க அனுமதிக்கும் ஒரு முறைமை ஆகும். **(02 புள்ளிகள்)**

1.18
- வருமான அணுகுமுறை
- உற்பத்தி அணுகுமுறை
- செலவின அணுகுமுறை **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

1.19 - ஒரேயொரு நிறுவனம் சந்தையில் இருத்தல்.

- விலை தீர்மானிப்பாளர்.
- கேள்வி வளையி கீழ்நோக்கிய சாய்வாக இருப்பது.
- உற்பத்திப் பொருளுக்கான / தனித்துவமான உற்பத்திப் பொருளுக்கான நெருக்கமான பிரதியீடு இல்லை.
- பிரவேசிப்பதற்கான தடைகள் உள்ளன. **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

1.20 - ஏற்றுக்கொள்ளும் தன்மை.

- அடையாளங் காண்பது சௌகரியமானது.
- எடுத்துச்செல்லக்கூடியது.
- பிரிபடத்தக்கது.
- சீரான தன்மையுடையது. **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

***பகுதி A முடிவு***

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**

(மொத்தம் 40 புள்ளிகள்)

**பகுதி B**

**வினா 2 இற்கான விடைகள்**

**அலகு 1 – வணிகச் சூழலில் பொருளாதார எண்ணக்கருக்களும் முறைமைகளும்**

**கற்றற் பேறுகள்** - வரையறையற்ற விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு அரிதான வளங்களை சமூகங்கள் எவ்வாறு ஒதுக்கீடு செய்கின்றன என்பதை இனங்கண்டு, விபரிப்பர். (இதில் அரிது; தெரிவு: சந்தர்ப்பச் செலவு; உற்பத்திச் சாத்திய எல்லை, வினைத்திறன், மற்றும் உரிமையாண்மை உள்ளடங்கும்).

- பொருள்கள், சேவைகளின் உற்பத்திக்குப் பயன்படும் பொருளாதார வளங்கள், பொருளாதாரமற்ற வளங்களை இனங்காண்பர்.
- பல்வேறு பொருளாதார முறைமைகளில் எதை உற்பத்தி செய்வது, எவ்வாறு உற்பத்தி செய்வது, யாருக்காக உற்பத்தி செய்வது போன்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரசினங்களைத் தீர்ப்பதை விளக்குவர்.

**(a)**

| | | **பொருளாதார** | **பொருளாதாரமற்ற** |
|---|---|---|---|
| 1. | பெறுமதி | பணப் பெறுமதியைக் கொண்டுள்ளது. | பணப் பெறுமதி இல்லை. |
| 2. | பயன்பாடு | பொருள்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகிறது. | உற்பத்தியில் நேரடியாகப் பயன்படுத்தப்படுவதில்லை. |
| 3. | கிடைப்பனவுத்தன்மை | மட்டுப்படுத்தப்பட்டதும் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியதும் | இலவசமாகக் கிடைப்பது. |
| 4. | அரிதானதன்மை | அரிதானது / மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல் | அரிதானதல்ல / ஏராளமாக உள்ளன. |

**(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

**(b)**
- இரண்டு பொருள்கள் மாத்திரம் உற்பத்தி செய்யப்படலாம். (எ.கா. உணவு மற்றும் ஆடைகள்).
- கவனத்திற் கொள்ளப்படும் காலப்பகுதியில் கிடைக்கக்கூடிய வளங்களின் அளவு நிலையானது.
- தொழினுட்பம் மாறாதது.
- அனைத்து கிடைக்கக்கூடிய வளங்களும் முழுமையாகவும் உயர்ந்தபட்ச வினைத்திறனுடனும் பயன்படுத்தப்படுகின்றன.

**(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)**

**(C)** சந்தைப் பொருளாதாரத்தில், தனிப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் நிரம்பல் மற்றும் கேள்வியின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கின்றன. வினாவானது எந்த உற்பத்தியானது நுகர்வோர் விருப்பங்களால் தீர்மானிக்கப்படுகிறது என்பதும் இலாபகரமான வழங்கல் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன என்பதும் ஆகும். முறைமையானது பொருள்கள் மற்றும் சேவைகளின் ஒப்பீட்டு விலை மற்றும் இலாபத்தன்மை ஆகியவற்றின் ஊடாக கேள்விக்குத் தீர்வு காண்கிறது.

சந்தைப் பொருளாதார முறைமையில், எவ்வாறு உற்பத்தி செய்வது என்ற கேள்வியைத் தீர்ப்பதில் உள்ள உற்பத்தி நுட்பமானது காரணிச் சந்தையில் தரப்பட்ட காரணியின் கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகள் ஊடாகத் தீர்மானிக்கப்படுகின்ற ஒப்பீட்டுக் காரணி விலையின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் இலாபத்தைக் கருத்திற்கொண்டு தீர்மானிக்கிறது. இங்கு அதிகபட்ச இலாபத்தை உறுதிசெய்யும் குறைந்தபட்சச் செலவுடனான நுட்பமானது கேள்வியைத் தீர்க்கத் தெரிவு செய்யப்படுகிறது.

யாருக்காக உற்பத்தி செய்வது என்பது கொள்வனவு செய்யும் திறன் கொண்டவர்களிடம் செல்கின்ற பொருள்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கான நுகர்வோரின் திறன் மற்றும் விருப்பத்தால் தீர்மானிக்கப்படுகிறது. இலாபத்தை ஈட்டுவதற்கு, தொழில்முனைவோர் செலவு செய்யக்கூடியவர்கள் சார்பாக பொருள்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்ய வேண்டும். **(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**வினா 3 இற்கான விடைகள்**

| |
|---|
| **அலகு 2 – கேள்வி, நிரம்பல், சமநிலை, மற்றும் அரசாங்கத் தலையீட்டு உபாயங்கள்** |
| **கற்றற் பேறுகள்** - கேள்வி, நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளை விபரிப்பர். |
| - சந்தை சமநிலையையும் அதன் வணிகத் தாக்கத்தையும் விபரிப்பர். |

**(a)**
- தொடர்புடைய பொருள்களின் விலை அதிகரிப்பு.
- உற்பத்தியில் பயன்படுத்தப்படும் காரணி உள்ளீடுகளின் விலை அதிகரிப்பு.
- காலாவதியான, வழக்கிழந்த தொழினுட்பங்களின் கிடைப்பனவு.
- சந்தையில் வழங்குநர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி.
- உற்பத்தியாளர்கள் மீது அரசாங்கத்தால் விதிக்கப்படும் வரியை விதித்தல் அல்லது அதிகரித்தல்.
- அரசாங்கத்தால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் மானியங்களை அகற்றுதல்.
- பொருள்களின் விலை எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்ற உற்பத்தியாளர்களின் எதிர்பார்ப்புகள்.

**(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)**

**(b)**



கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் நுகர்வோரும் வழங்குநர்களும் வெவ்வேறு விலைகளில் எவ்வாறு தொழிற்படுகின்றனர் என்பதைக் காட்டுகின்றன. விலை $P_2$ இல், மிகையான நிரம்பல் காணப்படுகிறது. பின்னர் விலை குறைய வாய்ப்புள்ளது. $P_1$ இல், மிகையான கேள்வி காணப்பட்டு, விலை அதிகரித்துச் செல்கிறது. பின்னர் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் புள்ளி **E** இல் இடைவெட்டுகின்றன. இந்தப் புள்ளியில் கேள்வி = நிரம்பல். எனவே **P** ஆனது சமநிலை விலை ஆகும். **(04 புள்ளிகள்)**

**(c)** சொந்த பொருளின் விலையைத் தவிர நிரம்பலைத் தீர்மானிக்கின்ற அனைத்துக் காரணிகளும் மாறாது இருக்கும்போது, தரப்பட்ட காலப்பகுதி ஈறாக அந்தப் பொருளின் வழங்கல் செய்யப்பட்ட கணியத்திற்கும் பொருளின் விலைக்கும் இடையேயான நேர்த் தொடர்பை நிரம்பல் விதி விபரிக்கிறது.

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 4 இற்கான விடைகள்

**அலகு 2 – கேள்வி, நிரம்பல், சமநிலை, மற்றும் அரசாங்கத் தலையீட்டு உபாயங்கள்**

**அலகு 3 – உற்பத்திச் செயன்முறைகள் மற்றும் பல்வகைச் சந்தைக் கட்டமைப்புகள்.**

**அலகு 7 – பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி, மற்றும் வளர்ந்துவரும் போக்குகள்**

கற்றற் பேறுகள்
- அரசின் சந்தைத் தலையீட்டு உபாயங்களை விபரிப்பர்
- நிறை போட்டி மற்றும் தனியுரிமையில் உள்ள இலாப உச்சப்படுத்தலை விபரிப்பர். (உகந்த வெளியீடு மற்றும் விலை)
- பிரதான சமகால பேரினப் பொருளாதாரக் குறிகாட்டிகளை இனங்கண்டு, வணிகத்துடனான அவற்றின் தொடர்பை விபரிப்பர்.

**(a)** குறைந்தபட்ச சட்டபூர்வ விலையை (தாழ்ந்த விலை) விதித்தல்: ஒரு பொருளை விற்கக்கூடிய குறைந்தபட்ச விலையை சட்டபூர்வமாக அறிவிப்பது குறைந்தபட்ச சட்டபூர்வ விலையை விதித்தல் எனக் குறிப்பிடப்படுகிறது. சமநிலை விலையை விட அதிகமாக சட்டபூர்வ விலையை அமைக்கும்போது அது குறைந்தபட்ச சட்டபூர்வ விலையை விதித்தல் எனக் குறிப்பிடப்படுகிறது. மேலும் அரசாங்கம் உற்பத்தியாளர் மற்றும் உற்பத்திக் காரணிகளின் உரிமையாளர்களின் நல்வாழ்வில் அக்கறை கொள்ளும்போது குறைந்தபட்ச விலை விதிக்கப்படுகிறது. குறைந்தபட்ச சட்டபூர்வ விலை விதிக்கப்படும்போது, சட்டபூர்வமாகத் தீர்மானிக்கப்பட்ட விலையை விட குறைந்த விலையில் தரப்பட்ட பொருளை அல்லது தரப்பட்ட காரணி உள்ளீட்டைக் கொள்வனவு செய்வது சட்டவிரோதமானதாகும். குறைந்தபட்ச சட்டபூர்வ விலை அறிமுகப்படுத்தப்படும்போது, அதிகப்படியான (மிகை) நிரம்பலானது சந்தையில் உருவாகிறது. இது சந்தையில் சமநிலையின்மையை உருவாக்குகிறது. சந்தையில் மிகைப்படியான வழங்கல் காணப்படின், அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச சட்டபூர்வ விலையைப் பேணுவது கடினமாகும். இது பொருளாதாரத்தின்

அரிதான வளங்களின் விநியோகத்தில் வினைத்திறனின்மையை உருவாக்கும். இங்கு, இருக்கின்ற மிகையானவற்றை அகற்றுவதற்காக சந்தை விலையைச் சரிசெய்ய விலைப் பொறிமுறையை சுதந்திரமாகச் செயற்படுத்துவதற்கு சாத்தியக்கூறு இல்லை. எனவே, குறைந்தபட்ச சட்டபூர்வ விலையை வெற்றிகரமாகப் பராமரிக்க வேண்டுமாயின் சந்தையில் இருக்கின்ற மிகையானவற்றை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.




**(04 புள்ளிகள்)**

**(b)**




Profit maximizing point – F

தனியுரிமை (ஏகபோகம்) ஒன்றில், ஒரேயொரு நிறுவனமானது நெருக்கமான பிரதியீட்டுப் பொருள்கள் இல்லாத ஒரு பொருளுக்காக ஒட்டுமொத்த சந்தையையும் கட்டுப்படுத்துகிறது. இலாபத்தை அதிகரிப்பதற்காக, ஏகபோக உரிமையாளர், எல்லை வருமானமானது எல்லைக் கிரயத்திற்கு சமனாக இருக்கின்ற (MR=MC) வெளியீட்டு மட்டத்தில் பொருளை உற்பத்தி செய்கிறார்.

ஏகபோக நிறுவனங்கள் உயர்ந்தபட்ச இலாபத்தை சம்பாதிக்கின்ற சமநிலைப் புள்ளியை புள்ளி 'F' குறிக்கிறது. இந்தப் புள்ளியில் MC உம் MR உம் சமமாக இருப்பதுடன் அந்தப் புள்ளிக்கு அப்பால், MC உயர்வடைந்து MR ஐ விட அதிகமாகிறது. எனவே ஒரு நிறுவனம் இந்த வெளியீட்டு மட்டத்தில் செயற்படின் அதன் இலாபத்தை உச்சப்படுத்த முடியும். **(04 புள்ளிகள்)**

**(c)** HDI ஆனது ஆயுட்கால எதிர்பார்ப்பு (ஆரோக்கியம்), கல்வி (சராசரி மற்றும் எதிர்பார்க்கப்படும் பாடசாலை ஆண்டுகள்), மற்றும் தலா வருமானம் (GNI) ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) போன்ற பொருளாதாரக் குறிகாட்டிகளுக்கு அப்பாற்பட்டது. மனித நல்வாழ்வைப் பற்றிய முழுமையான பார்வையை வழங்குகிறது. இது நாடுகளுக்கிடையேயான ஒப்பீடுகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சமூக மற்றும் பொருளாதாரக் குறிகாட்டிகளை இணைப்பதன் மூலம் HDI மக்களின் நல்வாழ்வு மற்றும் வாழ்க்கைத் தரங்களைப் பற்றிய முழுமையான பார்வையை வழங்குகிறது. உண்மையான அபிவிருத்தி என்பது வெறுமனே நிதிச் செல்வத்தை விட அதிகமாக உள்ளடக்கியது என்பதை இது ஒப்புக்கொள்கிறது. **(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**வினா 5 இற்கான விடைகள்**

**அலகு 5 – நிதி முறைமை, பணம், மற்றும் விலை மட்ட மாறல்கள்**

**கற்றற் பேறுகள் -** பணத்தின் வகிபாகம், அதன் கேள்வி, நிரம்பலை விபரிப்பர்.

- நிதி இடையீட்டாளர்கள் வணிகச் செயற்பாடுகளில் எவ்வாறு உதவு கின்றனர் என்பதை விபரிப்பர்.
- வர்த்தக வங்கிகளின் திரவத்தன்மை மற்றும் இலாபத்தன்மைக்கு இடையேயான இணைபை விபரிப்பர்.

**(a)** நிதி இடையீட்டாளர்கள், மிகையான அலகுகளிலிருந்து கடன் வாங்கி, பற்றாக்குறையான அலகுகளுக்கு கடன் வழங்குவது போன்ற முக்கியமான நிதி இடைநிலைச் செயற்பாட்டை மேற்கொள்கிறார்கள். நிதி இடையீட்டாளர்கள் முதலீட்டிற்கான நிதியை வழங்குவதன் மூலமும் இடர் பகிர்வு ஊடாக கடன் இடரைக் குறைப்பதன் மூலமும் சீரான கொடுப்பனவுச் செயன்முறையை இயலச்செய்வதன் மூலமும் வணிகங்களை ஆதரிக்கின்றனர். அவர்கள் நிதி ஆலோசனைகளையும் வழங்குகிறார்கள். அவை வணிகத் தீர்மானங்களை மேம்படுத்த வணிகங்களுக்கு உதவுகின்றன. மேலும் அவர்கள் நிதியைத் திரட்டுவதன் மூலம் இடர்களைக் குறைப்பதுடன் வணிகங்கள் நிதியை வினைத்திறனுடன் அணுக உதவுகின்றனர். சேமிப்பாளர்களிடமிருந்து கடன் வாங்குபவர்களுக்கு நிதியை வினைத்திறனுடன் அனுப்புவதால் அவர்கள் கடன் வாங்கும் செலவைக் குறைத்து நிதிக்கான அணுகலை மேம்படுத்துகிறார்கள். இது ஒட்டுமொத்த வணிக வளர்ச்சியையும் பொருளாதார அபிவிருத்தியையும் ஊக்குவிக்கிறது. **(04 புள்ளிகள்)**

**(b)** **பரிமாற்ற ஊடகம் :**

பணத்தை ஒரு பரிமாற்ற ஊடகமாகப் பயன்படுத்துவது, பண்டமாற்றுச் சிரமங்களை நீக்குகிறது. இந்தச் செயற்பாட்டின் மூலம் தேவைகளின் இரட்டைச் தற்செயல் செயற்பாடு, போக்குவரத்துப் பிரச்சினைகள், சேமிப்பு, மற்றும் சிறிய அலகுகளாகப் பிரிப்பதில் உள்ள சிரமங்கள் போன்ற சில குறைபாடுகள் நீக்கப்பட்டன. இதன் விளைவாக, பணத்தை ஏனைய சொத்துக்களிலிருந்து தெளிவாகப் வேறுபடுத்தி அறியலாம். இது விற்பனையாளர்கள் பொருள்கள் மற்றும் சேவைகளை பணத்திற்காக பரிமாற்றிக் கொள்ளவும் பின்னர் அவர்கள் விரும்பும் பொருள்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள பணத்தைப் பயன்படுத்தவும் உதவுகிறது.

**பெறுமதியின் சேமிப்பு :**

எவ்வித இடருமின்றி எதிர்காலப் பயன்பாட்டிற்காக பணத்தைச் சேமிக்கும் திறனை பணத்தின் பெறுமதியைச் சேமிக்கும் செயல்பாடு என விபரிக்கலாம்.

**கணக்கின் ஓர் அலகாகப் பணம் (பெறுமதியின் அளவீடு):**

பொருள்களுக்காக பணத்தைப் பரிமாறிக்கொண்டால், அந்தப் பொருள்கள் பணத்தின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படும். பண்டமாற்று முறைமையின் கீழ், ஆயிரக்கணக்கான மாற்று வீதங்கள் தேவைப்படும். உதாரணமாக, கோதுமைக்கான அப்பிள்கள் மற்றும் முட்டைகளுக்கான இறைச்சி. எல்லாவற்றையும் பணத்தின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்வதன் மூலம் இத்தகைய பிரச்சினைகளைச் சமாளிக்க முடியும்.

**பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியமங்கள் :**

பணமானது கடன் அல்லது கடன் உடன்படிக்கைகள் போன்ற எதிர்காலத்தில் கொடுப்பனவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும்போது பிற்போடப்பட்ட கொடுப்பனவின் நியமமாகப் பணம் தொழிற்படுகிறது. **(1½ புள்ளி வீதம், 03 புள்ளிகள்)**

**(C)** வர்த்தக வங்கிகளில், திரவத்தன்மைக்கும் இலாபத்தன்மைக்குமிடையே பொதுவாக ஓர் எதிர்மறையான தொடர்பு காணப்படுகிறது. நிதி நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு போதுமான திரவத்தன்மையைப் பராமரிப்பது மிக முக்கியமானது என்றாலும் மிகைப்படியான திரவச் சொத்துக்களை வைத்திருப்பது முதலீடு மற்றும் கடன் வழங்குவதன் மூலம் வருமானத்தை ஈட்டுவதற்கான வங்கியின் திறனைக் குறைக்க முடியும். இதன் பொருள், வங்கிகள் இலாபத்தை உச்சப்படுத்துவதற்கான தேவையுடன் திரவத்தன்மைக்கான தேவையை சமப்படுத்தும் தேவை வங்கிகளுக்கு உள்ளது என்பதாகும்.

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***பகுதி B முடிவு***

**ஒரு கட்டாய வினா**

மொத்தம் 20 புள்ளிகள்

## பகுதி C

**வினா 6 இற்கான விடைகள்**

**அலகு 4 –** பொருளாதார முகாமைத்துவத்தில் தேசிய கணக்கீடும் அரசாங்கத்தின் வகிபாகமும்.

**அலகு 6 –** சர்வதேச வர்த்தகமும் வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தையும்

கற்றற் பேறுகள்
- பேரினப் பொருளாதார இலக்குகளை ஏற்பிசைவு செய்வர், பொருளா தார இலக்குகளை அடைவதற்கான கொள்கைகளை விபரிப்பர்.
- வெவ்வேறு துறைகளில் வருமானச் சுற்றோட்டப் பாய்வை விபரிப்பர்.
- நிதிக் கொள்கைக் கருவிகளையும் வணிகத்தில் அதன் தாக்கத்தையும் விபரிப்பர்.
- அந்நியச் செலாவணிச் சந்தை மற்றும் பரிமாற்று வீத நிர்ணயம் பற்றி விபரிப்பர்.

**(A)**

| | | ரூ. மில்லியன் |
|---|---|---|
| | தனியார் நுகர்வுச் செலவினம் | 4,000 |
| | அரசாங்க நுகர்வுச் செலவினம் | 6,000 |
| | மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 2,500 |
| | இருப்புகளில் உள்ள மாற்றங்கள் | 400 |
| | பெறுமதிகளில் உள்ள மாற்றங்கள் | 320 |
| **(a)** | **மொத்த உள்நாட்டுச் செலவினம் (GDE) – சந்தை விலையில்** | **13,220** |
| | சேர்க்க: பொருள்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி | 5,200 |
| | கழி: பொருள்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகள் | (14,500) |
| **(b)** | **மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில்** | **3,920** |
| | வெளிநாட்டு நிகர முதன்மை வருமானம் | 700 |
| **(c)** | **மொத்த தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில்** | **4,620** |

**(07 புள்ளிகள்)**

**(B)** (1) நீண்ட காலமாக பரிமாற்று வீதத்தை செயற்கையாக வைத்திருத்தல் :

பரிமாற்று வீதத்தின் கேள்வி மற்றும் நிரம்பலைக் கவனத்திற் கொள்ளாது பரிமாற்று வீதம் நிலையாக வைத்திருக்கப்பட்டு, திடீரென மிதக்க விடப்பட்டது. இது டொலர் வீதத்தின் அதிகரிப்புக்கு வழிவகுத்தது.

(2) இறக்குமதிச் செலவினத்திற்கும் ஏற்றுமதி வருமானத்திற்கும் இடையேயான இடைவெளி :

இலங்கையின் இறக்குமதிச் செலவினம் அதன் ஏற்றுமதி வருமானத்தை விட அதிகமாக உள்ளது. இது வியாபாரக் கணக்கின் பற்றாக்குறைச் சமநிலையை உருவாக்குகிறது.

(3) வட்டி வீதங்களை பணவீக்கத்தை விடக் குறைவாகப் பேணுதல். இது மக்களை சேமிப்பதற்குப் பதிலாக நுகர்வதற்குக் கட்டாயப்படுத்துகிறது.

(4) சென்மதி நிலுவை இடைவெளிக்கு நிதியளிப்பதற்காக வெளிநாட்டுக் கடன்களில் அதிகம் சார்ந்திருத்தல்.

(5) செயற்றிட்டங்களுக்காக எடுக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் வியாபாரக்கடன் பற்றாக்குறை களைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வெளிநாட்டு ஒதுக்கங்கள் கடன்கள் மீதான வட்டியைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

(6) கோவிட்-19 உடன், தொழிலாளர்களிடமிருந்து வருகின்ற வெளிநாட்டுப் பணம் குறைவடைந்தது. இது நாட்டின் அந்நியச் செலாவணி வழங்கலில் குறைவை ஏற்படுத்தியது.

(7) மூலப் பொருள்களின் பற்றாக்குறை காரணமாக உலகளாவிய பொருளாதாரத்தில் எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகள் அதிகரித்தன. இது அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதியை மதிப்பிறக்கம் செய்தது.

(8) கோவிட்-19 நோய்த்தொற்று காரணமாக, சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாகக் குறைந்தது. இதன் விளைவாக, நாடு ஈட்டக்கூடிய வெளிநாட்டு வருமானத்தை இழந்தது. இதன் காரணமாக, அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் மதிப்பு குறைந்துள்ளது.

**(01 புள்ளி வீதம், 04 புள்ளிகள்)**

**(C)** 2019 இற்குப் பிறகு, இலங்கைப் பொருளாதாரம் கடுமையான மந்தநிலைக் காலகட்டத்தினுள் நுழைந்தது. இது எதிர்மறை வளர்ச்சி, பணவீக்க உயர்வு, மற்றும் பரவலான பற்றாக்குறையால் குறிப்பிடப்படுகிறது. இந்தப் பொருளாதார வீழ்ச்சிக்கு பல பிரதான காரணிகள் பங்களிப்புச் செய்தன :

(1) **கோவிட்-19 நோய்த் தொற்றின் தாக்கம் (2020 இலிருந்து):**

நோய்த் தொற்றானது இலங்கைக்கு வெளிநாட்டு வருமானத்தின் முக்கிய ஆதாரமான சுற்றுலாத்துறை, ஏற்றுமதிகள் மற்றும் பண அனுப்பல்கள் போன்ற பிரதான துறைகளைக் கடுமையாகப் பாதித்தது. ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை மற்றும் குறைந்த உலகளாவிய கேள்விகள் போன்றவை பொருளாதார நடவடிக்கைகளில் மந்தநிலைக்கு வழிவகுத்தன.

(2) **மோசமான பொருளாதார முகாமையும் கொள்கைத் தீர்மானங்களும் :**

பெரிய வரிக் குறைப்புகளால் அரசாங்க வருமானம் குறைவடைந்தது. பாதீட்டுப் பற்றாக்குறையை ஈடுகட்ட மிகையான பணம் அச்சடிக்கப்பட்டது. இது பணவீக்கம் ஏற்பட வழிவகுத்தது. மேலும் இரசாயன உரங்கள் மீதான தடை பயிர் விளைச்சலைக் குறைத்தது. இது உணவுப் பற்றாக்குறை ஏற்படவும் விலை அதிகரிக்கவும் வழிவகுத்தது.

(3) **வெளிநாட்டுக் கடன் நெருக்கடிகள் :**

வெளிநாட்டுக் கையிருப்புகள் குறைவாக இருந்ததால் இலங்கை வளர்ந்துவரும் வெளிநாட்டுக் கடன் சுமையை எதிர்கொண்டது. இது இறையாண்மைக் கடன் நெருக்கடியையும் கடன்களை மீளச் செலுத்துவதில் சிரமங்களுக்கும் வழிவகுத்தது.

(4) **அரசியல் ஸ்திரமின்மை :**

அடிக்கடி ஏற்படும் அரசாங்க மாற்றங்கள் மற்றும் அரசியல் அமைதியின்மை காரணமாக முதலீட்டாளர்களின் நம்பிக்கை குறைவடைந்து நிலையான பொருளாதாரத் திட்டமிடலில் இடையூறுகள் ஏற்படுகின்றன. இது பெரியளவான பொருளாதார நிச்சயமற்ற தன்மைக்கு வழிவகுக்கிறது.

(5) **சென்மதி நிலுவை நெருக்கடிகள் :**

இறக்குமதிகள் மீதான வெளிப்பாய்வுகள் மற்றும் கடன் மீள்கொடுப்பனவுகள் ஆகியன ஏற்றுமதி அனுப்பல்களிலிருந்தான வருமானத்தை விட அதிகமாக இருந்ததால் வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறையை எதிர்கொண்டது. இந்தப் பற்றாக்குறை இறக்குமதிகளுக்குக் கொடுப்பனவை மேற்கொள்வதையும் வெளிநாட்டுக் கடன் சேவைகளையும் கடினமாக்கியது. இது பொருளாதார நிலையை மோசமாக்கியது. **(01½ புள்ளிகள் வீதம், 03 புள்ளிகள்)**

**(D)** (1) **அரசாங்கச் செலவினம் அதிகரித்தல் :**

அரசாங்கமானது உட்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் பொதுச் சேவைகள் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கலாம். இது பொருளாதாரத்தின் ஒட்டுமொத்தக் கேள்வியை உயர்த்துவதுடன் நீண்ட காலத்தில் உற்பத்தித்திறனையும் அதிகரிக்கிறது ($Y = C + I + G + X - M$).

(2) **வரிகளைக் குறைத்தல் :**

தனிநபர்கள் மற்றும் கம்பனிகளின் வரிகள் குறைக்கப்படுதலானது மக்கள் பணத்தைச் செலவு செய்வதை அதிகரிக்கச் செய்வதுடன் முதலீடுகளை அதிகமாகச் செய்ய வணிகங்களை ஊக்குவிக்கிறது. நுகர்வோர் செலவு செய்தல் மற்றும் வணிக முதலீடுகள் ஆகிய இரண்டிலும் ஏற்படும் இந்த அதிகரிப்பானது கேள்வி மற்றும் நிரம்பல் பக்கங்கள் இரண்டினதும் வளர்ச்சிக்கு உதவுகிறது.

(3) **இலக்கிடப்பட்ட மானியங்கள் மற்றும் ஊக்கத்தொகைகளை வழங்குதல் :**

நிதியுதவி அல்லது மானியங்களை வழங்குவதன் மூலம் விவசாயம், மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் தொழினுட்பம் போன்ற முக்கிய தொழிற்றுறைகளுக்கு அரசாங்கம் ஆதரவளிக்கலாம். இது இந்தத் தொழிற்றுறைகள் வளர்வதற்கும் புத்தாக்கங்களைச் செய்வதற்கும் உதவுகிறது.

(4) **தூண்டுதல் பொதிகள் மற்றும் சமூக இடமாற்றங்கள் :**

காசுக் கொடுப்பனவுகள், தொழிலின்மை நன்மைகள், அல்லது உணவு உதவி போன்றவற்றின் ஊடாக குடும்பங்களுக்கு நேரடியாக நிதியுதவி வழங்கப்படுவதால், பொருளாதார மந்தநிலையின்போது அரசாங்கம் நுகர்வோர் செலவினங்களை சீராகப் பேண முடிவதுடன் வறுமையைக் குறைக்கவும் உதவுகிறது. **(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)**

**(E)**

(1) நிலையான பாதீட்டுக் குறைபாடுகள்.

(2) நேரில் வரிகள் மீது அதிக நம்பகத்தன்மை (இறக்குமதித் தீர்வைகள், VAT, குறைந்த நேர் வரிகள்).

(3) பொதுத் துறை விரிவாக்கமும் வினைத்திறனின்மையும்

(4) அதிக கடன் பெறுகைகளும் கடன் திரட்சியும்.

(5) தற்காலிக மற்றும் அரசியலால் உந்தப்பட்ட கொள்கைகள்.

(6) உற்பத்தித் துறைகளில் முதலீடு போதாமை.

(7) போதியதல்லாத நிதி பன்முகப்படுத்தல்.

(8) பலவீனமான நிறுவனக் கொள்ளளவும் ஆளுகையும் **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**பகுதி C முடிவு**